MINISTRY OF HEALTH
SINGAPORE

National Healthcare Group
Adding years of healthy life

NUH
National University Hospital
A member of the NUHS

Alexandra Health

EASTERN HEALTH ALLIANCE

JurongHealth

SingHealth

SINGHEALTH / PIL / T74R0

நோயாளி தகவல் கையேடு

# பூஞ்சக்காளான் -எதிர்ப்பு மருந்துகள்
## (ANTI-FUNGAL MEDICATIONS)

பூஞ்சக்காளான் -எதிர்ப்பு மருந்துகள
**ANTI-FUNGAL MEDICATIONS**

## உங்கள் மருந்து **பற்றிய** தகவல்

**பூஞ்சக்காளான்-எதிர்ப்பு மருந்துகள், தோல், நகங்கள், வாய், தொண்டை மற்றும் யோனிக்குழாய் (vagina) ஆகிய உறுப்புகளில் ஏற்படும் பூஞ்சக்காளான் தொற்றுகளுக்குச் சிகிச்சை அளிக்கப் பயன்படுத்தப்படுகின்றன. இவை மாத்திரைகள், கிரீம் அல்லது லோஷன் மற்றும் மருந்துக்குச்சி (pessaries) ஆகிய வடிவங்களில் கிடைக்கின்றன.**

**இம்மருந்துக்கான உதாரணங்களில், குளோட்ரிமசோல் (Clotrimazole), ஐசோகொனசோல் (Isoconazole), மைகொனசோல் (Miconazole), கிரைசியோ.ஃ.புல்வின் (Griseofulvin), .ஃ.புளுகொனசோல் (Fluconazole), டெர்பினா.ஃ.பைன் (Terbinafine ) மற்றும் அமொரோல்.ஃ.பைன் (Amorolfine) அடங்கும்.**

## இந்த மருந்தை நான் **எப்படி** உட்கொள்ள வேண்டும்/பயன்படுத்த வேண்டும்?

மாத்திரை / குழல் மாத்திரை (Capsules):

- மாத்திரையை உணவுடனோ அல்லது உணவுக்குப் பிறகோ உட்கொள்ளுங்கள்.
- நீங்கள் குணமாக ஆரம்பித்தாலும், கொடுக்கப்படும் மாத்திரைகள் எல்லாவற்றையும் முடித்துவிடுங்கள். தோல் குணமாகிவிட்ட பிறகும் நீங்கள் இந்த மருந்தைப் பல வாரங்களுக்குத் தொடர வேண்டியிருக்கலாம். சிகிச்சையை முழுமையாக முடிக்காவிட்டால், தொற்று மீண்டும் பாதிக்கலாம், அல்லது மாத்திரைகளுக்கு எதிர்ப்பு ஏற்படும் நிலை உருவாகலாம்.

கிரீம் :

- சுத்தமான, ஈரமில்லாத தோல் மீது மருத்துவர் கூறியபடி ஒரு நாளைக்கு ஒன்று அல்லது இரண்டு முறை தடவுங்கள்.

யோனிக்குழாய் மாத்திரை (Vaginal Pessary):

- இரவில் உறங்கச் செல்வதற்கு சற்று முன், யோனிக்குழாயில் பொருத்துங்கள்.
- முதலில் சிறுநீர் கழியுங்கள்.
- மருந்துக்குச்சியின் உறையை அகற்றிவிட்டு, அதைத் தண்ணீர் தடவி ஈரமாக்குங்கள்.
- மல்லாந்து படுத்து, கால் முட்டிகளை மடக்கி, உடலைத் தளர்த்துங்கள்.
- யோனிக்குழாய் மாத்திரை ஒரு கையில் பிடித்துக் கொள்ளுங்கள். பிறகு ஒரு விரலைப் பயன்படுத்தி அதை மெதுவாக யோனிக்குழாயில் செருகுங்கள். ஆனால், வலிக்கும் அளவுக்கு அதை ஆழமாகச் செருகாதீர்கள்.
- விரலை எடுத்துவிடுங்கள். மாத்திரை யோனிக்குழாயில் தங்கிவிடும்.

இந்த மருந்தை நாள்தோறும் தவறாமல் பயன்படுத்துங்கள். சிகிச்சைக் காலத்தில் உங்களுக்கு மாதவிடாய் வந்துவிட்டாலும்கூட, மருந்துக்குச்சி பயன்படுத்துவதை நிறுத்தாதீர்கள்.

## மருந்தைப் **பயன்படுத்த மறந்துவிட்டால்** என்ன செய்வது?

ஒரு வேளைக்குரிய மருந்தை உட்கொள்ள/பயன்படுத்தத் தவறிவிட்டால், ஞாபகம் வந்த உடனேயே பயன்படுத்துங்கள். எனினும், அப்போது அடுத்த வேளைக்கான நேரம் நெருங்கிவிட்டால், முதலில் எடுக்கத் தவறிய மருந்தை விட்டுவிட்டு, அடுத்த வேளை வரை காத்திருங்கள். முதலில் பயன்படுத்தத் தவறிவிட்டோமே என்று அடுத்த வேளையில் இரண்டு மடங்கு மருந்தோ அல்லது கூடுதல் மருந்தோ பயன்படுத்தாதீர்கள்.

## இந்த மருந்து ஏற்படுத்தக்கூடிய **பக்க-விளைவுகள்** யாவை ?

பின்வரும் பாதிப்புகள் ஏற்படலாம். இவை கடுமையாகவோ அல்லது நீங்காமலோ இருந்தால், மருத்துவரைப் பாருங்கள்.

- குமட்டல், வாந்தி
- வயிற்று வலி
- வயிற்றுப்போக்கு

பின்வரும் பக்க விளைவுகள் இருந்தால், உடனே மருந்து எடுப்பதை நிறுத்திவிட்டு, அவசர மருத்துவ உதவி நாடுங்கள்ஈ

- தோல் தடிப்புகள்
- கண்கள் வீங்குதல்
- மூச்சுவிடச் சிரமப்படுதல்

கிரைசியோ.ஃ.புல்வின் (Griseofulvin) மாத்திரை பின்வரும் பாதிப்புகளை ஏற்படுத்தலாம். தேவையில்லாமல் சூரிய ஒளியில் செல்லாதீர்கள் அல்லது சூரியத்தடுப்பு களிம்பு (sunblock) தடவிச் செல்லுங்கள். தலைவலி இருந்தால், அது, மருந்தைத் தொடர்ந்து உட்கொண்டு வரும்போது நாளடைவில் நீங்கிவிடும்.

- அதிக சூரிய ஒளியில் தோல் பாதிப்படைதல்
- தலைவலி

இவை தவிர, மற்ற பக்க-விளைவுகளும் ஏற்படலாம். வழக்கத்திற்கு மாறான, அல்லது அதிகத் தொல்லை தரும் பக்க-விளைவு ஏதேனும் இருந்தால் மருத்துவரிடம் கூறுங்கள்.

## நான் எடுக்க வேண்டிய **முன்னெச்சரிக்கைகள்** யாவை ?

மருந்தை தொடங்குவதற்கு முன், பின்வருபவை இருந்தால் மருத்துவரிடம் தெரிவியுங்கள்:

- பூஞ்சக்காளான்-எதிர்ப்பு மருந்துகளுக்கு, அல்லது வேறு ஏதாவது மருந்துக்கு உங்களுக்கு ஒவ்வாமை இருநதால்.
- நீங்கள் கர்ப்பமாக இருந்தால் அல்லது தாய்ப்பால் கொடுத்து வந்தால்.
- வேறு மருந்துகள் அல்லது மூலிகைப் பொருட்கள் உட்கொண்டு வந்தால்.
- சானிட்டரி நேப்தின்

யோனிக்குழாய் காளான்தொற்று சிகிச்சையின்போது:

உங்களின் உள்ளாடைகள் மருந்தினால் கறைபடாமல் இருப்பதற்கு, நீங்கள் மாதவிடாய்க்கால கழிவாடை (ஸாநிதாரய நாபகிநஸ) அணிந்து கொள்ளலாம். சுகாதாரமாக இருப்பது கிருமித்தொற்று மீண்டும் ஏற்படுவதைத் தடுக்க உதவும். யோனிக்குழாய்ப் பகுதியை சுத்தமாகவும் ஈரமில்லாமலும் வைத்திருங்கள். சலவை செய்த சுத்தமான உள்ளாடைகளையே எப்போதும் அணியுங்கள். உங்களின் கணவருக்கு தொற்று ஏற்பட்டிருந்தால் அவரும் சிகிச்சை எடுத்துக் கொள்ள வேண்டும்.

## நான் எடுக்க வேண்டிய **முன்னெச்சரிக்கைகள்** யாவை ?

மருந்தின்மீது வெப்பமோ நேரடி வெளிச்சமோ படாதவாறு, அறை வெப்பநிலையில், ஓர் உலர்ந்த இடத்தில் வைத்திருங்கள். உங்களிடம் கூறப்பட்டாலன்றி, மருந்தை குளிர்ப் பதனப் பெட்டியில் வைக்காதீர்கள்.



மருந்துகளை எப்போதும் பிள்ளைகளின் கைகளுக்கு எட்டாத இடத்தில் வைத்திருங்கள
காலாவதியான அல்லது இனிமேல் தேவைப்படாத மருந்துகளை வீசிவிடுங்கள